**செய்தி வெளியீடு எண்: 279** **நாள்: 23.05.2013**

தமிழ்நாடு அரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்,
சென்னை–600 113

திரைப்படத் துறை மற்றும் தொலைக்காட்சித் துறையில் மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களையும், இயக்குநர்களையும் உருவாக்கி வரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம். கடந்த ஐம்பது ஆண்டுகளாக, சென்னை தரமணியில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் செவ்வனே இயங்கி வருகின்றது.

மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படம் பதனிடுதல், படத்தொகுப்பு ஆகிய நான்கு பிரிவுகளிலும், பட்டப் படிப்பில்; தேர்ச்சி பெற்ற மாணவ/மாணவியர் இயக்குதல் பிரிவிலும், இக்கல்லூரியில் மூன்றாண்டு கால பட்டயப் படிப்பிற்காக 2013–2014–ஆம் கல்வியாண்டில் முதலாம் ஆண்டு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் மூன்றாண்டு கால பட்டயப் படிப்புகளுக்காக வரவேற்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பாடப் பிரிவுகளில் சேர்ந்து, கலைத்துறையில் தங்களின் கலை ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள விரும்பும் மாணவ/மாணவியர், இதற்கான விண்ணப்பப் படிவங்களை, 24.05.2013 நாளன்று நாளிதழ்களில் வெளிவரும் விளம்பரங்களைப் பார்த்தும் தமிழக அரசின் "www.tn.gov.in" என்ற இணையதள முகவரியில் 24.05.2013 – இல் இருந்து படியிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம் என்று முதல்வர், எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் , சென்னை – 600 113 அவர்கள் தெரிவித்துள்ளார்.

முதல்வர் (பொறுப்பு)

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**